செ.வெ.எண்:68 நாள்: 26.01.2019

**நாகப்பட்டினம் மாவட்ட விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற 70-வது குடியரசு தின விழாவில்**
**மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப அவர்கள்**
**தேசிய கொடியை ஏற்றி வைத்து காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு சுதந்திர போராட்ட தியாகிகளை கௌரவித்து**
**150 பயனாளிகளுக்கு ரூ.76 இலட்சத்து 27 ஆயிரத்து 285 மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

நாகப்பட்டினம் மாவட்ட விளையாட்டு மைதானத்தில் இன்று (26.01.2019) நடைபெற்ற 70-வது குடியரசு தின விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்து மரியாதை செலுத்தி, காவல்துறை, ஊர்காவல் படை, தேசிய மாணவர் படை, சாரணியர் ஆகியோரது அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப., அவர்கள்,

6 சுதந்திர போராட்ட தியாகிகளுக்கு சால்வை அணிவித்து கௌரவித்தார்.

வருவாய்த்துறையில் சிறப்பாக பணியாற்றிவரும் 04 அலுவலர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களும், ஊரக வளர்ச்சித் துறை சார்பில் சிறப்பாக பணியாற்றியமைக்காக 02 பேருக்கு பாராட்டுச் சான்றிதழும், நகராட்சி நிர்வாகங்கள் துறையில் சிறப்பாக பணியாற்றியமைக்காக 01 நபருக்கு பாராட்டுச் சான்றிதழும், மருத்துவம், ஊரக நலப்பணிகள் மற்றும் குடும்பநலத்துறையில் சிறப்பாக பணியாற்றியமைக்காக மருத்துவ அலுவலர் மற்றும் ஊழியர்கள் 08 பேருக்கு பாராட்டுச் சான்றிதழும், தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பலர்கலைக்கழகத்தில் சிறப்பாக பணியாற்றியமைக்காக பேராசிரியர் 01 நபருக்கு பாராட்டுச் சான்றிதழும், கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் மூலம் சிறப்பாக பணியாற்றியதற்காக 03 அலுவலர்களுக்கு பாராட்டுச் சான்றிதழும், தமிழ்நாடு மின்சார வாரியம் சார்பில் சிறப்பாக பணியாற்றியதற்காக 43 நபர்களுக்கு பாராட்டுச் சான்றிதழும், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் சார்பில் "பிளாஸ்டிக் மாசில்லா தமிழ்நாடு" இயக்கத்தில் சிறப்பாக பணிபுரிந்த 01 நபருக்கு பாராட்டுச் சான்றிதழும், கருவூலம் மற்றும் கணக்குத்துறையில் சிறப்பாக பணிபுரிந்தமைக்காக 04 நபர்களுக்கு பாராட்டுச் சான்றிதழும், கல்வித்துறையில் சிறப்பாகப் பணிபுரிந்தமைக்காக 09 நபர்களுக்கும், 03 மாணவிகளுக்கும் என மொத்தம் 12 நபருக்கு பாராட்டுச் சான்றிதழும், மாவட்ட மின் ஆளுமை பிரிவில் சிறப்பாக பணிபுரிந்த 02 நபருக்கு பாராட்டுச் சான்றிதழும், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையில் சிறப்பாக பணிபுரிந்தமைக்காக 04 நபருக்கு பாராட்டுச் சான்றிதழும், தேசியத் தகவல் மையத்தில் சிறப்பாக பணிபுரிந்தமைக்காக 02 நபருக்கு பாராட்டுச் சான்றிதழும், ஊர்க்காவல் படையில் சிறப்பாக பணிபுரிந்தமைக்காக 09 நபருக்கு பாராட்டுச் சான்றிதழும் என மொத்தம் 96 பேருக்கு பாராட்டுச் சான்றிதழ்களையும்,

மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 1 நபருக்கு ரூ.6750 மதிப்பிலான செயற்கை கை மற்றும் 1 நபருக்கு ரூ.7240 மதிப்பிலான மூன்று சக்கர சைக்கிள் என மொத்தம் ரூ.13,990 மதிப்பிலான உபகரணங்களும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் 1 நபருக்கு ரூ.4800 மதிப்பிலான விலையில்லா சலவைப் பெட்டியும், 11 நபருக்கு தலா ரூ.6000 வீதம், ரு.66,000 மதிப்பிலான விலையில்லா தையல் இயந்திரங்களையும், முன்னாள் படைவீரர் நலத்துறையின் சார்பில் 3 நபர்களுக்கு தலா ரு.25 ஆயிரம் வீதம் ரு.75ஆயிரம் மதிப்பிலான கல்வி உதவி தொகையும், சமூக நலத்துறை சார்பில் முதலமைச்சரின் இரு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஒரு

குழந்தைக்கு தலா ரூ.25,000 வீதம் 18 குழந்தைகளின் தாய்மார்களான 9 பயனாளிகளுக்கு ரூ.4 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பிலான வைப்புத் தொகையும், வேளாண்மைத்துறையின் சார்பில் தலா ரூ.17,414 மதிப்பிலான தெளிப்புநீர்க்கருவி 03 பயனாளிகளுக்கும், ரூ.35,700 மதிப்பிலான ஆயில் இஞ்சின் 02 பயனாளிகளுக்கும், தலா ரூ.797.60 மதிப்பிலான உளுந்து விதைகள் 07 பயனாளிகளுக்கும், தலா ரூ.1876 மதிப்பிலான தார்பாய்கள் 02 பயனாளிகளுக்கும் என ரூ.1 லட்சத்து 32 ஆயிரத்து 977 மதிப்பிலும், தோட்டக்கலைத் துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ.4,170 மதிப்பிலான வீரிய ரக விதைகளும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்(மகளிர் திட்டம்) மூலம் வங்கிக் கடனுதவியாக 10 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மொத்தம் ரூ.53 லட்சத்து 30 ஆயிரம் மதிப்பிலான கடனுதவியும், தாட்கோ மூலம் 02 பயனாளிகளுக்கு ரூ.15 லட்சத்து 50 ஆயிரத்து 348 மதிப்பிலான கடனுதவி என மொத்தம் 54 பயனாளிகளுக்கு ரூ. 76 இலட்சத்து 27 ஆயிரத்து 285 மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

நாகப்பட்டினம் அன்னை சத்யா அரசு குழந்தைகள் காப்பகம், நாகூர் மாடர்ன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, அக்கரைப்பேட்டை அரசு மேல்நிலைப்பள்ளி, திருமங்கலம் அரசு மேல்நிலைப்பள்ளி, நாகூர் கிரசென்ட் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, ஏனங்குடி அரசு மேல்நிலைப்பள்ளி, பஞ்சநதிக்குளம் விக்டரி மேல்நிலைப்பள்ளி, செம்பனார்கோவில் தாமரை மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, ஆக்கூர் அரசு மேல்நிலைப்பள்ளி. நாகப்பட்டினம் இ.ஜி.எஸ்.பிள்ளை கலைக்கல்லூரி உள்ளிட்ட பள்ளி மாணவ மாணவியர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

முன்னதாக திரு.ஜி.சந்திரமோகன்(உதவி ஆய்வாளர்) தலைமையில் காவல்துறையினர் அணிவகுத்துச் சென்றனர். மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப., அவர்கள் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

நாகப்பட்டினம் நாகப்பட்டினம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.செ.விஜயகுமார்,இ.கா.ப., மாவட்ட கூடுதல் திட்ட அலுவலர்(கஜா புயல் சீரமைப்புப் பணிகள்) திரு.பிரதாப் குமார்,இ.ஆ.ப, நாகப்பட்டினம் சார் ஆட்சியர் திரு.ஏ.கே.கமல்கிஷோர்,இ.ஆ.ப, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.ம.கண்ணன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மீ.செல்வகுமார், ஊர்காவல் படை தளபதி திரு.ஆனந்தன், வட்டாட்சியர் திரு.இளங்கோவன், அரசு அலுவலர்கள், பொதுமக்கள், பள்ளி மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு :-**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**